# YESU POTHUMAE

இயேசு போதுமே இயேசு போதுமே

இயேசு போதுமே என் இயேசு போதுமே

மனிதர் என்னைக் கைவிட்டாலும்

மாமிசம் அழுகி நாறிட்டாலும்

ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்

ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும்

...இயேசு போதுமே....

பிசாசின் சோதனை பெருகிட்டாலும்

சோர்ந்து போகாமல் நான் முன்செல்லவே

உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்

நான் மயங்கிடாமல் என்றும் முன்னேறவே

...இயேசு போதுமே....

எனக்காய் ஜீவன் விட்டவரே

என்னோடிருக்க எழுந்தவரே

என்னை என்றும் வழிநடத்துவீரே

என்னை சந்திக்க வந்திடுவரே

...இயேசு போதுமே....

எந்த நாளிலுமே எந்நிலையிலுமே (4)

எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே

...இயேசு போதுமே....